# விலைகள், கூலிகள், தொழில்நிலை

## பொதுவான விலை மாற்றங்கள்

குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் நியதிகளில் அளவிடப்பட்டவாறு, விலைகளின் பொதுவான மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதம் 1993 இன் 11.7 சதவீதங்கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 8.4 சதவீதமாக இருந்தது. இதனால் விலை அதிகரிப்பின் ஆண்டுச் சராசரி வீதமானது 1987 இற்குப் பின்னர் முதற் தடவையாக 1994 இல் ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தது. திசெம்பரில் சுட்டெண்ணின் புள்ளிக்குப் புள்ளி அதிகரிப்பு (1993 திசெம்பரைவிட 1994 திசெம்பர்) 1993 திசெம்பரின் 10.3 சதவீதமாக இருந்த அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீதமாக குறைந்து காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணிலும் பார்க்க பரந்தளவு புவியியற் பிரதேசத்தினை உள்ளடக்கிய கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண் 1994 இல் 4.8 சதவீதமான ஆகக்குறைந்த ஆண்டுச் சராசரி அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1993 இல் கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் பதிவு செய்யப்பட்ட 8.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியாகும். 1994 இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் 1993 இன் 7.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.0 சதவீதங் கொண்ட குறைந்த அதிகரிப்பினையே பதிவு செய்தது.

**அட்டவணை 1.40**

**கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (1952 = 100)**

| விடயம் | சராசரிச் சுட்டெண் | | வருடாந்த சராசரி சதவீத மாற்றம் | | புள்ளிக்குப்புள்ளி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1992 இற்கு மேலாக 1993 | 1993 இற்கு மேலாக 1994 | 1992 திசம்பருக்கு மேலாக 1993 திசெம்பர் | 1993 திசம்பருக்கு மேலாக 1994 திசெம்பர் |
| எல்லா விடயங்களும் ... | 1,408.4 | 1,527.4 | 11.7 | 8.4 | 10.3 | 4.2 |
| பண்ட வகைப்படி | | | | | | |
| உணவு ... | 1,519.4 | 1,654.1 | 11.2 | 8.9 | 10.0 | 3.6 |
| உடை ... | 782.7 | 795.7 | 8.2 | 1.7 | 8.0 | 0.2 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 2,730.0 | 3,131.6 | 17.0 | 14.7 | 27.3 | 1.0 |
| வாடகை ... | 109.8 | 109.8 | – | – | – | – |
| பல்வகை ... | 1,490.4 | 1,578.7 | 13.0 | 5.9 | 5.1 | 9.7 |

மூலங்கள் : குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்.
இலங்கை மத்திய வங்கி.

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் துணைவகைகளான உணவு, உடை, எரிபொருளும் வெளிச்சமும் மற்றும் பல்வகை என்பனவற்றின் விலைகளும் 1993 இனைவிட 1994 இல் குறைந்த வீதத்திலேயே அதிகரித்தன. நிருவகிக்கப்பட்ட விலைகளில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு இவ்விரு துணைவகைகளிலும் விலை அதிகரிப்புக்களின் வீதம் குறைவடைந்து ஒற்றை இலக்க மட்டத்திற்கு குறைவடையப் பெருமளவில் உதவியது. ஆண்டின் பின்னரைப் பகுதியில் பாண், கோதுமைமா, மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலைகள் குறைக்கப்பட்ட வேளையில் சில நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் ஒன்றில் முழுமையாக நீக்கப்பட்டன அல்லது குறைக்கப்பட்டன. அரிசியின் விலை அதிகரிப்புக்களில் காணப்பட்ட மிதமான தன்மையும் மிளகாய் மற்றும் தேங்காயின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி அதேபோன்று உடைகள் மற்றும் பல்வகை வகைகளின் விலைகளில் ஏற்பட்ட மெதுவான விலை அதிகரிப்பு என்பவும் இவ்வாண்டில் பணவீக்க வீதத்தினை மட்டுப்படுத்த உதவின. எனினும் விரிந்த பண நிரம்பல் 19.6 சதவீதத்தினால் அதிகரித்தமை பொதுவான விலை மட்டத்தின்மீது தொடர்ந்தும் உயர்ந்த கேள்வி அழுத்தத்தினை தோற்றுவித்தது.

## விலைகள்

### நுகர்வோர் விலைகள்

ஆண்டின் முதல் நான்கு மாதங்களும் விலைகளின் மிக அதிகரித்த போக்கினை முக்கிய பண்பாகக் கொண்டிருந்தன. பெரும்போக அறுவடைக் காலத்துடன் இணைந்துவரும் மாச்சு–ஏப்பிறல் காலப்பகுதியில் விலைகளில் வழமையாகக் காணப்படும் மிதமான தன்மை தாமதமான பருவ கால மழையினால் 1993/94 பெரும் போகப் பயிர்ச் செய்கையின் காரணமாக மே வரையில் உணரப்படவில்லை. மேயிலிருந்து விலைகளில் ஒரு தெளிவான வீழ்ச்சிப் போக்கு அவதானிக்கப்பட்டது. இப்போக்கு, நிருவாக விலைக் குறைப்புக்கள் நடைமுறைக்கு வந்தபொழுது மேலும் வலுவடைந்தன. கோதுமைமா, பாண், மற்றும் மண்ணெண்ணெய் என்பனவற்றின் விலைக் குறைப்புக்கள் கொ. நு. வி. சுட்டெண்ணில் கணிசமான தாக்கத்தைக் கொண்டிருந்தன. இவ்விலைக் குறைப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருந்திருந்தால் விலை அதிகரிப்பு வீதம் உண்மையில் பதிவுசெய்யப்பட்ட 8.4 சதவீதத்திலும் பார்க்க மிக உயர்வாக 10.1 சதவீதமாக இருந்திருக்கும்.

சுட்டெண்ணில் பெருமளவு நிறையைக் கொண்டிருக்கும் (61.9 சதவீதம்) உணவுவிடயங்கள் சுட்டெண்ணின் மொத்த அதிகரிப்பில் 73 சதவீதத்திற்கு காரணமாக அமைந்தன. பொதுவான விலை உயர்விற்கு எரிபொருளும் வெளிச்சமும், பல்வகை மற்றும் உடைகள் வகைகளினது பங்களிப்பு முறையே 14 சதவீதமாகவும் 12 சதவீதமாகவும் 1 சதவீதமாகவும் காணப்பட்டது.

உணவு வகையின் விலைகள் முன்னைய ஆண்டின் 11.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இன் ஆண்டுச்சராசரி அடிப்படையில் 8.9 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1994 மேயில் கருவாடு மற்றும் பருப்புவகை மீதான இறக்குமதித் தீர்வைகள் அகற்றப்பட்டவேளையில் தகரத்திலடைக்கப்பட்ட மீன் மற்றும் சீனியின்

மீதான தீர்வைகள் குறைக்கப்பட்டன. 1994 யூலையில் கோதுமை மாவின் விலை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ. 13.30 லிருந்து கி. கிறாமொன்றுக்கு ரூ. 11.80 இற்கு குறைக்கப்பட்டதுடன் அதன் விளைவாக 450 கிறாம் கொண்ட பாணின் விலை ரூ. 5.50 இலிருந்து ரூ. 5.00 இற்கு வீழ்ச்சியடைந்தது. புதிய அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து கோதுமைமாவின் விலை கிலோக்கிறாமொன்று ரூ. 7.45 இற்கு மேலும் குறைக்கப்பட்டதுடன் 450 கிறாம் கொண்ட பாணின் விலை ரூ. 3.50 இற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டுக் காலத்தில் பல முக்கிய உணவு விடயங்களின் விலைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1994 இல் நெல் உற்பத்தி அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்விளைவாக அரிசியின் விலைகள் முன்னைய ஆண்டின் சராசரி மட்டத்துடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டன. கோதுமைமா, பாண் விலைகளின் விலைக் குறைப்புக்களினால் ஏற்பட்ட பதிலீட்டுத்தாக்கமும் அரிசி விலைகள் குறைவடையக் காரணமாயிருக்கக் கூடும். திருந்திய உற்பத்தியினைத் தொடர்ந்து தேங்காயின் விலை மிகக்கூடுதலாக வீழ்ச்சியடைந்தவேளையில் செத்தல் மிளகாயின் விலை தாழ்வுற்றமைக்கு சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட இருப்புக் கிடைக்கத்தக்கதாக இருந்தமையே காரணமாகும். இவ்வாண்டில் காய்கறிகள், வெங்காயம், உடன்மீன், உருளைக்கிழங்கு என்பன மிகக்கூடுதலான விலை அதிகரிப்பினைப் பதிவு செய்தன. எனினும் பாண், தேங்காய், மற்றும் செத்தல் மிளகாய் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் உணவு விடயங்களின் விலைகளில் காணப்படும் அதிகரிப்பின் பொதுவான வீதம் மெதுவடைவதற்கு பெருமளவிற்குப் பங்களித்தன.

எரிபொருள் மற்றும் வெளிச்சம் வகையில் விலைகள் 1993 இன் 17.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் 14.7 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இந்த வகையில் செத்தெம்பர் இறுதியில் மண்ணெண்ணெயின் விலை இலீற்றரொன்று ரூ. 11.80 இலிருந்து ரூ. 9.50 இற்குக் குறைக்கப்பட்டமையானது ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியின் விலைகள் குறைவடையக் காரணமாயிருந்த வேளையில் கடந்த ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடர்ச்சியாக அதிகரித்த விறகின் விலையே விலைகள் மேல் நோக்கி உயரப் பொறுப்பாக இருந்தது.

உடைகள் வகையின் விலைகள் 1993 இன் 8.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 1.7 சதவீதமான சிறிதளவு வளர்ச்சியை எடுத்துக்காட்டின. பல்வகைத்தொகுதியில் விலைகள் 5.9 சதவீதத்தினால் உயர்வடைந்து முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட 13.0 சதவீதமான வளர்ச்சியிலிருந்தும் கணிசமாக குறைவடைந்தது.

## கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்

குடிமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் கணிக்கப்பட்ட கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலும் பார்க்கப் பரந்தளவு புவியியற் பரப்பையும் விடயங்களையும் உள்ளடக்கியதொரு சுட்டெண்ணாகும். மேலும் 1985/86 இல் நடாத்தப்பட்ட அளவீட்டினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு, கொழும்பு பெரும்பாகப் பகுதியின் தாழ் மட்டத்திலிருந்த 40 சதவீத குடியிருப்பாளர்களின் (வருமான ரீதியாக

வரிசைப்படுத்தப்பட்டது) செலவுப் போக்கை அடிப்படையாகக் கொண்டிருந்த இதன் எடைகள் கொழும்பு நுர்வோர் விலைச்சுட்டெண்ணின் எடைகளைவிட காலத்துடனொட்டியவைகள் எனக் கருதமுடியும்.

1994 இல் கொ. பெ. நு. வி. சுட்டெண் கொ. நு. வி. சுட்டெண்ணினைவிட மிகக் குறைந்த அதிகரிப்பினையே காட்டியது. 1994 இற்கான சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 1993 இன் 8.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.8 சதவீதமாக இருந்தது. புள்ளிக்குப்புள்ளி அடிப்படையில் (1993 திசெம்பரைவிட 1994 திசெம்பர்) சுட்டெண் 1.4 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்துள்ளது. கொ. பெ. நு. விலைச்சுட்டெண்ணின்படி இவ்வாண்டில் உணவு விலைகள் முன்னைய ஆண்டின் 8.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.0 சதவீதத்தினால் உயர்வடைந்தன. கொ. பெ. நு. விலைச் சுட்டெண்ணின் எரிபொருள் வெளிச்ச வகையில் விலைகள் முன்னைய ஆண்டின் அதிகரிப்பினை ஒத்ததாக 17.0 சதவீதத்தினால் உயர்வடைந்தன. உடைகள் மற்றும் காலணி வகையில் விலைகளின் வளர்ச்சி 3.9 சதவீதமாக அமைந்து 1993 இல் பதிவு செய்யப்பட்ட 8.2 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க குறிப்பிடத்தக்களவு குறைவானதாக விளங்கியது. குடிவகை, புகையிலை, வெற்றிலையும் பாக்கும்; தனிப்பட்ட நலக்கவனிப்பு, நலப்பணிகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் பணிகள்; போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் ஆகியவைகளிலுள்ள விலைகளின் அதிகரிப்புக்கள் முறையே 8.2 சதவீதமாகவும் 6.7 சதவீதமாகவும் 0.5 சதவீதமாகவும் அமைந்து முன்னைய ஆண்டில் இவ்வகைகளினால் எடுத்துக்காட்டப்பட்ட அதிகரிப்புக்களை விட குறைவான தன்மையை எடுத்துக்காட்டின.

**அட்டவணை 1.41**

**கொழும்பு பெரும்பாக நுகர்வோர் விலைச்சுட்டெண்**

**(சனவரி - யூன் 1989 = 100)**

| விடயம் | சராசரிச் சுட்டெண் | | ஆண்டுச் சராசரிச் சதவீத மாற்றங்கள் | | புள்ளிக்குப்புள்ளி சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1992 இற்கு மேலாக 1993 | 1993 இற்கு மேலாக 1994 | 1992 திசெம்பருக்கு மேலாக 1993 திசெம்பர் | 1993 திசெம்பருக்கு மேலாக 1994 திசெம்பர் |
| எல்லா விடயங்களும் | 164.8 | 172.6 | 8.4 | 4.8 | 6.9 | 1.4 |
| பண்டவகைப்படி - உணவும் குடிபானமும் | 172.2 | 179.1 | 8.7 | 4.0 | 6.6 | – |
| குடிவகை, புகையிலை மற்றும் வெற்றிலை பாக்கு | 180.1 | 194.9 | 13.3 | 8.2 | 5.6 | 9.9 |
| வீடமைப்பு | 109.3 | 109.5 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 |
| எரிபொருளும் வெளிச்சமும் | 157.9 | 184.8 | 17.0 | 17.0 | 25.7 | 6.2 |
| ஆடையும் காலணியும் | 190.3 | 197.8 | 8.2 | 3.9 | 5.8 | 5.6 |
| தனியார் கவனிப்பும் நலப்பணிகளும் மற்றும் வீட்டுப் பொருட்களும் பணிகளும் | 154.9 | 165.3 | 8.3 | 6.7 | 7.5 | 6.0 |
| போக்குவரத்தும் தொடர்பூட்டலும் | 163.5 | 164.3 | 1.1 | 0.5 | 1.2 | – |
| பல்வகை | 134.3 | 149.3 | 2.9 | 11.6 | 4.6 | 16.0 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்.

இரண்டு சுட்டெண்களினதும் நிறைகளில் காணப்பட்ட வேறுபாடுகள் இவ்வாண்டுக் காலத்தில் அவற்றினால் எடுத்துக்காட்டப்பட்ட விலைகளின் அதிகரிப்புக்களினது வேறுபட்ட வீதங்களுக்குப் பொறுப்பாக இருந்தன. குறிப்பாக விலை அதிகரிப்புக்களை எடுத்துக்காட்டிய காய்கறிகள், மீன் போன்ற விடயங்கள் கொ. நு. வி. சுட்டெண்ணிலும் பார்க்க கொ. பெ. நு. விலைச்சுட்டெண்ணில் குறைந்த நிறையையே கொண்டிருந்ததுடன் இவை கொ. நு. வி. சுட்டெண்ணிலும் பார்க்க கொ. பெ. நு. விலைச் சுட்டெண்ணில் குறைந்தளவு உயர்வையும் ஏற்படுத்தின.

## மொத்த விற்பனை விலைச்சுட்டெண்


மொத்த விற்பனை விலைச்சுட்டெண் முதலாந்தரச் சந்தை மட்டத்தில் விலை அசைவுகளை அளவீடு செய்கின்றது. 1994 இல் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 5.0 சதவீதத்தினால் உயர்வடைந்ததுடன் 1993 இன் சுட்டெண்ணினால் பதிவு செய்யப்பட்ட 7.6 சதவீத அதிகரிப்பினைவிடக் குறைவானதாக இருந்தது. முக்கிய ஏற்றுமதிப் பண்டங்கள் தேயிலை மற்றும் தெங்கின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியானது இவ்வாண்டுக்காலத்தில் நிலவிய விலைகளின் அதிகரிப்பு வீதம் வீழ்ச்சியடைவதற்கு பெருமளவிற்கு பங்களித்தது. இவ்வாண்டுக்காலத்தில் உணவு துணைத்தொகுதியிலுள்ள விலைகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்தவேளையில் வெறியம்சார் குடிவகைகள், புடவைகள், காலணி, இரசாயனமும் இரசாயன உற்பத்திகளும் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளும் கூட முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்புக்களுடன் ஒப்பிடுகையில் மெதுவானவையாகவே காணப்பட்டன. இவ்வாண்டுக்காலத்தில் மிகக்கூடியளவு விலை அதிகரிப்புக்கள் உலோகமல்லா உற்பத்திகள், எரிபொருளும் வெளிச்சமும் மற்றும் பல்வகைகளில் பதிவு செய்யப்பட்டன.

இவ்வாண்டில் உணவிற்கான துணைச்சுட்டெண் 1.3 சதவீதத்தினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. இது மொத்த விற்பனை விலைச்சுட்டெண்ணில் மிக முக்கிய பங்கினை வகிக்கும் துணைச் சுட்டெண்ணாகும். எனினும் உணவு வகையில் விலை அசைவுகள் சுட்டெண்ணில் உயர்ந்த நிறையைக் கொண்டுள்ள தேயிலை, தெங்கு, மற்றும் தெங்கு உற்பத்திகள் போன்ற உணவுவகையின் கீழான முக்கிய ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் பலமான செல்வாக்கிற்குட்பட்டன. இவ்வாண்டில் அனைத்து மூன்று உயரவகைத் தேயிலைகளினதும் விலைகள் வீழ்ச்சியடைந்தன. தெங்கின் விலைகள் 20 சதவீதத்திற்கும் கூடுதலாக பெருமளவில் வீழ்ச்சியடைந்தவேளையில் தேங்காயெண்ணெயின் விலை பெரும்பாலும் 15 சதவீதத்தினால் குறைவடைந்தது. அத்துடன், திறந்த சந்தையில் நெல்லின் விலையும் 8 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தவேளையில் கோதுமை மாவின் விலை 11 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் செத்தல் மிளகாயின் விலைகளும் வீழ்ச்சியடைந்தன. இவ்விலைவீழ்ச்சிகள் மீன், காய்கறிகள், உருளைக்கிழங்கு, சீனி போன்ற பண்டங்களின் விலைகளில் காணப்பட்ட மிகக்கூடியளவு விலை அதிகரிப்புக்களினால் மிகக் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டதுடன் உணவுத் தொகுதிக்கான துணைச்சுட்டெண் இவ்வாண்டில் வீழ்ச்சியடையவும் காரணமாக இருந்தது.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 = 100

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 1.42**

**மொத்தவிற்பனை விலைச் சுட்டெண் (1974 = 100)**

| விடயம் | சராசரிச் சுட்டெண் 1993 | சராசரிச் சுட்டெண் 1994 | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் 1992 இனைவிட 1993 | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் 1993 இனைவிட 1994 | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் 1992 திசெம்பரை விட 1993 திசெம்பரில் | புள்ளிக்குப் புள்ளி சதவீத மாற்றம் 1993 திசெம்பரை விட 1994 திசெம்பரில் |
|---|---|---|---|---|---|---|
| பண்டவகைப்படி எல்லா விடயங்களும் ... | 831.8 | 873.4 | 7.6 | 5.0 | 7.7 | 1.8 |
| உணவு ... | 770.4 | 760.4 | 7.0 | -1.3 | 4.2 | -4.3 |
| வெறிக் குடிவகைகள் ... | 956.2 | 969.2 | 7.9 | 1.4 | 1.7 | – |
| புடவை, காலணிகள் ... | 452.1 | 482.9 | 8.0 | 6.8 | 10.4 | 4.0 |
| தாள் உற்பத்திகள் ... | 745.2 | 761.6 | 5.7 | 2.2 | 7.9 | -0.1 |
| இரசாயன, இரசாயன உற்பத்திகள் ... | 542.2 | 550.4 | 2.1 | 1.5 | -1.2 | 3.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் ... | 1,240.8 | 1,295.0 | 9.2 | 4.4 | 12.5 | -7.7 |
| உலோகமல்லா உற்பத்திகள் ... | 1,566.8 | 1,896.1 | 15.5 | 21.0 | 20.1 | 14.3 |
| உலோக உற்பத்திகள் ... | 659.1 | 698.2 | 12.0 | 5.9 | 16.5 | 0.1 |
| போக்குவரத்து கருவிகள் ... | 660.0 | 682.2 | 5.9 | 3.4 | 1.6 | 5.8 |
| மின் கருவிகளும் வழுங்கல்களும் ... | 635.4 | 691.8 | 5.3 | 8.9 | 9.4 | 10.2 |
| பொறிகள் ... | 492.7 | 574.0 | 11.9 | 11.0 | 13.4 | 6.3 |
| எரிபொருளும் வெளிச்சமும் ... | 1,307.5 | 1,739.3 | 1.3 | 33.0 | 8.8 | 44.2 |
| பல்வகை ... | 1,480.0 | 2,050.5 | 11.8 | 38.5 | 28.9 | 31.3 |
| துறைவகைப்படி எண் I ... | | | | | | |
| உள்நாட்டு வகை ... | 737.6 | 833.6 | 5.8 | 13.0 | 9.8 | 8.6 |
| இறக்குமதி வகை ... | 671.6 | 702.0 | 5.9 | 4.5 | 10.7 | -5.8 |
| ஏற்றுமதி வகை ... | 1,235.5 | 1,169.1 | 11.4 | -5.4 | 2.9 | -3.0 |
| துறைவகைப்படி எண் II ... | | | | | | |
| நுகர்வுப் பொருட்கள் ... | 814.3 | 818.8 | 7.0 | 0.6 | 4.5 | -1.6 |
| இடைநிலைப் பொருட்கள் ... | 874.5 | 1,029.1 | 8.3 | 17.7 | 17.3 | 10.6 |
| முதலீட்டுப் பொருட்கள் ... | 938.3 | 1,094'8 | 13.7 | 16.7 | 16.7 | 11.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உலோகமல்லா உற்பத்திகளுக்கான துணைச்சுட்டெண் 1994 இல் 21.0 சதவீதத்தினால் உயர்வடைந்து 1993 இல் பதிவு செய்யப்பட்ட 15.5 சதவீத அதிகரிப்பினைவிட உயர்வானதாக இருந்தது. சீமெந்து, செங்கட்டிகள் போன்ற முக்கிய கட்டடவாக்கப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்ச்சி இவ்வதிகரிப்பிற்கு கணிசமானளவிற்கு உதவியது.

பல்வகை விடயங்களின் வகையில், விலைகள் முன்னைய ஆண்டின் 11.8 சத வீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 38.5 சதவீதத்தினால் அதிகரித்தன. இறப்பரின் (ஆர். எஸ். எஸ் 1) ஏலவிலை 40 சதவீதத்திற்கும் கூடுதலாக

அதிகரித்தமை இவ்வகையின் விலைகள் உயர்வடைவதற்குப் பெருமளவில் பொறுப்பாக இருந்தது.

எரிபொருளும் வெளிச்சமும் தொகுதியின் விலைகள் 33.0 சதவீதங்கொண்ட மிகக்கூடியளவு அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு விறகின் விலை மிகக்கூடுதலாக உயர்ந்தமையே பெருமளவு காரணமாகும். மின்துணைக்கருவிகள் மற்றும் வழங்கல்கள் வகையின் விலைகள் 8.9 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.5 சதவீதமான உயர்வுடன் ஒப்பிடுகையில் இது மிகக்கூடியளவு அதிகரிப்பாகவும் விளங்குகிறது.

இரசாயனமும் இராசயன உற்பத்திகளும் வகையில், விலைகள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 2.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.5 சதவீதத்தினால் உயர்வடைந்தன. இவ்வகையில் யூரியா போன்ற இரசாயன வளமாக்கிகளின் விலைகள் வளமாக்கி உதவுதொகைத் திட்டம் மீள அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து குறைவடைந்தன. பெற்றோலிய உற்பத்தி வகையில் விலைகள் முன்னைய ஆண்டின் 9.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 4.4 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1994 இன் இறுதிக்காலாண்டில் மண்ணெண்ணெய் மற்றும் டீசலின் விலையில் செய்யப்பட்ட குறைப்பு துணைச்சுட்டெண்ணில் பெரும் செல்வாக்கினைக் கொண்டிருந்தது. வெறியம்சார் குடிவகைகள், புடவையும் காலணிகளும், தாள் உற்பத்திகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் ஆகிய வகைகளின் விலைகள் முறையே 1.4 சதவீதத்தினாலும், 6.8 சதவீதத்தினாலும், 2.2 சதவீதத்தினாலும், 3.4 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. 1993 இல் இந்நான்கு வகைகளிலும் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்கள் முறையே 7.9 சதவீதமாகவும், 8.0 சதவீதமாகவும், 5.7 சதவீதமாகவும் 5.9 சதவீதமாகவும் காணப்பட்டன.

சுட்டெண்ணின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பின்படி, உள்நாட்டு வகைகளின் விலைகள் 13.0 சதவீதத்தினால் உயர்வடைந்து முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 5.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மிகக்கூடுதலான அதிகரிப்பாகக் காணப்படுகின்றது. 1994 இல் 4.5 சதவீதத்தினால் அதிகரித்த இறக்குமதி வகையின் விலைகள் 1993 இனைவிட சிறிதளவு உயர்வினை எடுத்துக்காட்டின. ஏற்றுமதி வகையின் விலைகள் 1993 இல் பதிவுசெய்யப்பட்ட 11.4 சதவீதங்கொண்ட கணிசமான அதிகரிப்பிற்கு மாறாக 5.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

முடிவுப்பயன்பாட்டுப் பகுப்பில், நுகர்வுப்பொருட்களின் விலைகள் முன்னைய ஆண்டின் 7.0 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் 0.6 சதவீதத்தினால் சிறிதளவு உயர்வடைந்தன. இடைநிலை மற்றும் முதலீட்டு வகைகளின் விலைகள் முறையே 17.7 சதவீதத்தினாலும், 16.7 சதவீதத்தினாலும் மிகக்கூடுதலாக அதிகரித்தன. முன்னைய ஆண்டில் இவ்வகைகளின் விலைகளின் அதிகரிப்புக்கள் குறைவாக முறையே 8.3 சதவீதமாகவும், 13.7 சதவீதமாகவும் காணப்பட்டன.

**கூலிகள்**

1994 இல் அரச ஊழியர்களின் கூலிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.9 சதவீதத்தினால் மெதுவான வீதத்தில் உயர்வடைந்தன. புதிய

சம்பள அளவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 1993 இல் கூலிகள் 21.1 சதவீதத்தினால் உயர்வடைந்தன. 1994 இல் கூலிகளில் ஏற்பட்ட 8.9 சதவீதமான அதிகரிப்பு இவ்வாண்டில் காணப்பட்ட விலை அதிகரிப்பு வீதத்தினை ஈடுசெய்ய மட்டும் போதுமானதாக இருந்தது. நன்கமைந்த தனியார்துறையில் பொதுவான கூலி உயர்வு குறைவடைந்ததுடன் அதன்விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் உண்மைக்கூலிகள் மோசமடைந்தவேளையில் பணிகளிலுள்ள வேலையாட்கள் கணிசமான கூலி அதிகரிப்பைப் பெற்றனர். பெயரளவு நியதிகளில் அனைத்துத்துறைகளிலும் கூலிகள் உயர்வடைந்தவேளையில் உண்மைக்கூலிகள் பெரும்பாலும் நெல், தெங்கு பயிர்ச் செய்கை மற்றும் கட்டட, கட்டுமானங்களிலுள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் முன்னேறியுள்ளமையை நன்கமையாத துறையின் தற்காலிகத் தரவுகள் எடுத்துக்காட்டின.

**அரசதுறை**


அரசதுறையில் 1993 ஆம் ஆண்டின் சம்பள மீளாய்வின் இறுதிக்கட்டம் 1994 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கட்டத்தின்கீழ் 1992 திசெம்பரில் ரூ. 3,000/- அல்லது மேற்பட்ட தொடக்கச் சம்பளத்தைப் பெற்ற அரச ஊழியர்கள் 1993இல் புதிய சம்பள மீளாய்வின்கீழ் குறித்துரைக்கப்பட்ட சம்பள அதிகரிப்பின் மிகுதி 50 சதவீதத்தினைப் பெற்றுக்கொண்டனர். (இந்த வகையினருக்கு அதிகரிப்பின் முதல் 50 சதவீதம் 1993 சனவரியிலிருந்து செலுத்தப்பட்டு வந்தது) சம்பள அமைப்பு முறையில் காணப்பட்ட முரண்பாடுகளை சரி செய்வதற்காக வேண்டி எழுதுவினைஞர் மற்றும் அதனோடு தொடர்புடைய தரங்களில் உள்ளவர்களின் சம்பளங்கள் 1994 ஓகத்திலிருந்து மேல் நோக்கித் திருத்தப்பட்டன. இடைமட்டத் தொழில்நுட்பப் பணியினருக்கான சம்பள வீதங்களும் மீளாய்வு செய்யப்பட்டன. சிற்றூழியர்களைப் பொறுத்தவரையில் ஆண்டொன்றுக்கு ரூ. 23,160/- அல்லது அதற்குக் குறைவான தொடக்கச் சம்பளத்தைப் பெறும் அனைத்துத் தரங்களுக்கும் மூன்று சம்பள உயர்வு மட்டங்களில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது.

அரசதுறையின் சம்பள அசைவுகள் அரசதுறை ஊழியர்களுக்கான சம்பளவீதச் சுட்டெண்களினால் அளவிடப்படுகின்றன. பெயரளவு நியதிகளில் 1994 இல் அனைத்து மத்திய அரச ஊழியர்களினதும் சம்பளவீதச் சுட்டெண் 8.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 1994 இல் விலை அதிகரிப்பு வீதம் 8.4 சதவீதமாகக் காணப்பட்டமையினால் இது உண்மைக்கூலிகளில் மிகச்சிறிய அளவான 0.5 சதவீத அதிகரிப்பினையே காட்டி நிற்கின்றது. எனினும் 1993 இன் புதிய சம்பள அளவுகளின் நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்து 1993 இல் பெயரளவுக் கூலிகள் அதிகூடிய 21.1 சதவீதத்தினாலும் உண்மைக் கூலிகள் 8.3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. நிறைவேற்றுத்தரமல்லா அனைத்து அலுவலர்களினதும் கூலிவீதச் சுட்டெண் 11.3 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அவர்களது உண்மைக் கூலிகள் 2.8 சதவீதத்தினால் மேம்பாடடைந்தன. 1994 ஓகத்தில் எழுதுவினைஞர் மற்றும் அதனோடு தொடர்புடைய தரங்கள் மற்றும் இடைமட்ட தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோருக்கான சம்பள முரண்பாடுகள் சரி செய்யப்பட்டமையே நிறைவேற்றுநர் அல்லாத தரங்களின் சம்பளங்களின் அதிகரிப்புக்கான முக்கிய காரணமாகும். எனினும் முன்னைய ஆண்டில் இந்த வகையினருக்கான பெயரளவுக் கூலிகளின் அதிகரிப்பு அதியுயர்வான 22.7 சதவீதமாகக் காணப்பட்டவேளையில்

## கூலி வீதச் சுட்டெண்

1978 திசெம்பர் = 100

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.43

கூலிவீதச் சுட்டெண்கள்
(திசெம்பர் 1978 = 100)

| | 1993 | | 1994 | | 1993 இனைவிட 1994 இல் சதவீதமாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் | பெயரளவு கூலிவீதச் சுட்டெண் | உண்மைக் கூலிவீதச் சுட்டெண் |
| 1. அரச ஊழியர்கள் | | | | | | |
| i. எல்லா நிறைவேற்றுத் தரமல்லா அலுவலர்கள் | 622.1 | 105.7 | 692.7 | 108.7 | 11.3 | 2.8 |
| ii. சிற்றூழியர்கள் ... | 728.3 | 123.8 | 772.3 | 121.1 | 6.0 | -2.2 |
| iii. எல்லா மத்திய அரச ஊழியர்கள் ... | 675.5 | 114.8 | 735.5 | 115.4 | 8.9 | 0.5 |
| iv. அரச பள்ளிக்கூட ஆசிரியர்கள் ... | 567.1 | 96.3 | 595.6 | 93.4 | 5.0 | -3.0 |
| 2. கூலி நிர்ணய சபை வர்த்தகத்திலுள்ள தொழிலாளர்கள் | | | | | | |
| i. வேளாண்மைத் தொழிலாளர்கள் ... | 803.8 | 136.6 | 821.5 | 128.8 | 2.2 | -5.7 |
| ii. கைத்தொழில் வர்த்தக தொழிலாளர்கள் ... | 528.2 | 89.8 | 555.8 | 87.2 | 5.2 | -2.9 |
| iii. பணிகள் தொழிலாளர்கள் ... | 365.8 | 62.2 | 431.4 | 67.6 | 17.9 | 8.7 |
| iv. கூலி நிர்ணயசபை வர்த்தகத் தொழிலாளர்கள்... | 685.7 | 116.6 | 712.4 | 111.7 | 3.9 | -4.2 |

மூலங்கள் : தொழிற்றிணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

உண்மைக் கூலிகளின் அதிகரிப்பு 9.5 சதவீதமாகக் காணப்பட்டது. 1994 இல் சிற்றூழியர்களுக்கான கூலி வீதச்சுட்டெண் 6.0 சதவீதத்தினால் அதிகரித்து உண்மைக் கூலியில் 2.2 சதவீத வீழ்ச்சியைக்காட்டியது. சராசரியாக அரச பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கான கூலிவீதச் சுட்டெண் 5.0 சதவீதத்தினால் அதிகரித்து இவ்வாண்டில் உண்மைக்கூலியில் 3.0 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

## நன்கமைந்த தனியார்துறை

1994 இல், கூலிச் சபைகளில் உள்ளடக்கப்பட்ட தொழிலாளர்களின் கூலிகள் 3.9 சதவீதத்தினால் அதிகரித்தன. இது 1993 இல் காணப்பட்ட 16.2 சதவீத அதிகரிப்பினைவிட மிகக்குறைவானதாகும். 1994 இல் கூலிச்சபைகளில் உள்ளடக்கப்பட்ட தொழலாளர்களின் உண்மைக் கூலிகள் 4.2 சதவீதத்தினால்

வீழ்ச்சியடைந்திருக்கையில் முன்னைய ஆண்டில் உண்மைக்கூலிகள் 4.1 சதவீதத்தினால் மேம்பட்டிருந்தன. சுட்டெண்ணில் ஆதிக்கம் செலுத்தும் வேளாண்மைத் தொழிலாளர்களின் கூலி அதிகரிப்பு மெதுவடைந்தமையே கூலிச்சபைகளில் உள்ளடக்கப்பட்ட தொழிலாளர்களின் பொதுவான தாழ்ந்த கூலி அதிகரிப்புக்குக் காரணமாக அமைந்தது. 1994 இல் வேளாண்மைத் தொழிலாளர்களின் பெயரளவுக்கூலி அதிகரிப்பு 2.2 சதவீதமாக மட்டுமே அமைந்து உண்மைக் கூலிகளில் 5.7 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. முன்னைய ஆண்டில் வேளாண்மைத் தொழிலாளர்களின் கூலிகள் பெயரளவு நியதிகளில் கணிசமான 21.1 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் உண்மைக்கூலிகள் 8.3 சதவீதத்தினால் மேம்பாடைந்திருந்தன. வரவு செலவுத் திட்டத்தில் படியாக ரூ. 12/- வழங்கப்பட்டதைத் தொடர்ந்து இத்தொழிலாளர்களுக்குச் செலுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியின் அதிகரிப்பு 01.01.1993 இலிருந்து தடுக்கப்பட்டமையின் காரணமாக அரச பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூலிகள் அதிகரிப்பு எதுவுமின்றி மாறாது காணப்பட்டன. பெருந் தோட்டத் தொழிலாளர்களின் கூலிகள் வேளாண்மைத் தொழிலாளர்களின் ஆகக்குறைந்த கூலிவீதச் சுட்டெண்ணில் கணிசமான நிறையினைக் கொண்டுள்ளமையினால் அவர்களின் சம்பளங்களில் அதிகரிப்பு இன்மையானது இந்த வகையினரின் சம்பள அதிகரிப்பு மெதுவடைந்தமைக்கு முக்கிய காரணமாக அமைந்தது. எனினும் பணிகளிலுள்ள தொழிலாளர்களின் கூலிகள் பெயரளவு நியதிகளில் இவ்வாண்டில் மிகக்கூடிய 17.9 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அவர்களது உண்மைக்கூலிகள் 8.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 1993 இல் தொழிலாளர்களுக்கான கூலிகள் பெயரளவு நியதிகளில் அதிகரிப்பின்றிக் காணப்பட்டவேளையில் உண்மைக்கூலிகள் 10.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1994 இல் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை ஊழியர்களின் கூலிஅதிகரிப்பு 5.2 சதவீதமாக விளங்கி முன்னைய ஆண்டின் அதிகரிப்பினைவிட உயர்வானதாக விளங்கியது (3.4 சதவீதம்), எனினும் இது 1994 இல் உண்மைக்கூலியில் 2.9 சதவீத வீழ்ச்சியினைக் குறித்துக் காட்டுகின்றது.

மருத்துவ மனைகள், புடவைத் தயாரிப்பு மற்றும் மோட்டார் போக்குவரத்து வர்த்தகம் ஆகிய வகைகளின் தொழிலாளர்களின் ஆகக்குறைந்த கூலிகள் 1994 இல் மேல் நோக்கித்திருத்தப்பட்டன.

**நன்கமையாத துறை**

நாடு முழுவதற்குமான தரவுச் சேகரிப்பு முறையின்கீழ் நன்கமையாத துறையின் நாட்கூலி மீதான தகவல்கள், வடமாகாணம் தவிர்ந்த நாட்டின் கிட்டத்தட்ட 100 நிலையங்களிலிருந்து பெறப்பட்டன. இக்கூலிகள் நெற்பயிர்ச் செய்கையின் பலதரப்பட்ட நடவடிக்கைகள், தேயிலை, இறப்பர், தெங்கு என்பவற்றின் சிறு உடமையாளர் பயிர்ச்செய்கை மற்றும் கட்டட நிருமாண நடவடிக்கைகள் என்பன சம்பந்தப்பட்டவையாகும்.

1994 இல் அனைத்து நடவடிக்கைகள் தொடர்பாகவும் நன்கமையாத துறையின் பெயரளவுக் கூலிகள் அதிகரித்தன. நெற்பயிர்ச் செய்கையில் அதிகரிப்பு வீதம் 8 சதவீதத்திற்கும் 17 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டது. அனைத்து நடவடிக்கையிலும் உண்மைக் கூலிகள் மேம்பாடடைந்தன. தெங்குப்பயிர்ச்

செய்கையிலும் பெயரளவுக்கூலிகள் கணிசமாக உயர்வடைந்த வேளையில் உண்மைக் கூலிகள் அனைத்து நடவடிக்கைகளிலும் மேம்பாடடைந்தன. ஒப்பிடுகையில் தேயிலை இறப்பர் பயிர்ச்செய்கையில் கூலி அதிகரிப்பு சார்புரீதியில் மெதுவானதாகக் காணப்பட்டதோடு பல நடவடிக்கைகளுடன் தொடர்பான உண்மைக்கூலிகள் வீழ்ச்சியடைந்தன. கட்டட நிருமாண நடவடிக்கைகளில் அனைத்துவகைத் தொழிலாளர்களினதும் பெயரளவுக் கூலிகள் 10 இலிருந்து 11 சதவீதம் வரையில் அதிகரித்தன. 8.4 சதவீத விலை அதிகரிப்பின் பின்னணியில் இது உண்மைக்கூலிகளில் மேம்பாடொன்றைக் காட்டுகின்றது.

## தொழில்நிலை

மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் ஆண்டுத் தொழில்நிலை அளவீட்டின்படி 1994 இறுதியில் அரச மற்றும் அரசுசார் துறைகளை உள்ளடக்கிய அரசதுறையின் மொத்தத் தொழில்நிலை 13.2 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டைவிட 2 சதவீத அதிகரிப்பாகும்.

1994 இறுதியில் மத்திய அரசு, அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய அரச நிறுவனங்களின் தொழில்நிலை 699,898 என மதிப்பிடப்பட்டுள்ளதோடு 1993 இனைவிட 3.5 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்துள்ளது. இவ்வதிகரிப்பானது வைத்தியர்கள் மற்றும் நலத்துறை ஆளணிகள் வகையிலும் எழுதுவினைஞர்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழிலாளர்கள் வகையிலும் பெருமளவு பிரதிபலிக்கப்பட்டதோடு இவை முறையே முன்னைய ஆண்டைவிட 8 சதவீத 6 சதவீத அதிகரிப்புக்களை காட்டின. முக்கியமாக பாதுகாப்புப் படைப்பிரிவுகளின் ஆளணிகளை உள்ளடக்கிய பணிகள் தொழிலாளர்வகை 4 சதவீதத்தினால் அதிகரித்தது. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அரசுடமையாக்கப்பட்ட வணிக நிறுவனங்கள், அரச வங்கிகள் என்பனவற்றை உள்ளடக்கிய அரசுசார் நிறுவனங்களின் தொழில்நிலை 1994 இல் சிறிதளவாக 1 சதவீதத்தினால் அதிகரித்தது. எழுதுவினைஞர் மற்றும் அதனோடு தொடர்புடைய தொழிலாளர்கள், தொழில்சார் மற்றும் தொழில்நுட்பமும் அதனோடு தொடர்புடைய தொழிலாளர் ஆகியவைகளின் முறையே 5 சதவீத 4 சதவீத அதிகரிப்புக்களே இதற்குக் காரணமாகும்.

தொழில்துறைப் பகுப்பாய்வின்படி, அரசதுறையில் மிகப்பெரிய தனித்தொகுதி ஊழியர்களாக உடலுழைப்பு வேலையாட்கள் விளங்கி மொத்த அரச ஊழியர்களில் 36 சதவீதத்தினருக்கு வகைகூறினர். ஆயினும் இப்பங்கு கடந்த சில ஆண்டுகளாக வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கைக் காட்டுவதுடன் இதற்கு, பெருந்தோட்டத்துறையிலுள்ள தொழிலாளர் வகையில் ஏற்பட்ட வீழ்ச்சியே பெருமளவிற்குக் காரணமாக இருந்தது.

நன்கமைந்த தனியார்துறையின் தொழில்நிலை பற்றிய காலத்தொடர்தரவுகள் போதியளவு கிடைக்கப்பெறுவதில்லை. எனவே முறைசார் தனியார்துறையின் தொழில்நிலையை மதிப்பிடுவதற்கு சேமநிதியங்களில் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்கள் போன்ற குறிகாட்டிகள் பயன்படுத்தப்பட்டன. 1994 இல் ஒப்புதலளிக்கப்பட்ட

சேமநிதியங்களுடன் பதிவுசெய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 1 சதவீதமான சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது. 1993 இல் ஊழியர் சேமநிதியத்தில் பதிவு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 6 சதவீதத்தினால் உயர்ந்திருந்தது. 1994 இல் அடையப்பட்ட திருப்பதிகரமான பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற்கொள்கையில் இவ்வாண்டிலும் இவ்வதிகரித்துச் செல்லும் போக்கு தொடர்ந்திருக்குமென்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன.

அட்டவணை 1.44

அரசதுறை தொழில்நிலை

| துணைத்துறை | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|
| 1. மத்திய அரசு, மாகாணசபைகள் உள்ளூராட்சி மன்றங்கள் | 653,959 | 676,483 | 699,898 |
| 2. அரசுசார் நிறுவனங்கள் | 637,271 | 618,794 | 625,266 |
| மொத்தம் | 1,291,230 | 1,295,277 | 1,325,164 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இலங்கை முதலீட்டுச் சபை 1994 இறுதியில் 134,572 பேருக்குத் தொழில் வழங்கி 1993 உடன் ஒப்பிடுகையில் 10 சதவீதங்கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. இம்முயற்சிகளில் காணப்பட்ட தொழில் நிலையில் ஏறத்தாழ 43 சதவீதமானவை கட்டுநாயக்கா ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திலேயே காணப்பட்டன. பியகம, கொக்கல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்கள் முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளிலுள்ள மொத்த தொழில் நிலையில் 16 சதவீதத்தினையும் 4 சதவீதத்தினையும் வழங்கின.

1994 இல் குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட தொழிற்படை மீதான காலாண்டு அளவீட்டினை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகள் 1994 ஏப்பிறலுடன் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் தொழில் பெற்றுக்கொண்டமையை எடுத்துக்காட்டுகின்றன. தயாரிப்புத்துறையில் உருவாக்கப்பட்ட தொழில்நிலை ஏறத்தாழ ஐம்பது ஆயிரமாக இருந்தவேளையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் பணிகள்துறையில் ஏறத்தாழ இரண்டு இலட்சத்து பத்தாயிரம்பேர் தொழில் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். தயாரிப்புத்துறையில் தொழில் ஈர்ப்பு குறிப்பாக புடவைகள் மற்றும் ஆடைகள் துணைத்துறையில் உயர்வாக இருந்தது. தொழிற்படையில் ஏறத்தாழ 41 சதவீதத்தினரைத் தற்போது கொண்டிருக்கும் வேளாண்மைத்துறையின் தொழில் ஈர்ப்பு 1994 இல் சார்புரீதியில் குறைவாகக் காணப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வெளிநாட்டில் தொழில்புரிவதற்காக குடியகல்வோரின் அதிகரித்துச் செல்லும் போக்கு 1994 இலும் தொடர்ந்தது. இலங்கை வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்பட்ட வானூர்தி நிலைய அளவீடு 1994 இல் உரிமம்பெற்ற முகவரகங்கள், இலங்கை

வெளிநாட்டு தொழில்வாய்ப்புப் பணியகம் மற்றும் ஏனைய வழிகள் மூலம் மொத்தம் 131,863 பேர் தொழில்களைப் பெற்றனர் என்பதனை எடுத்துக் காட்டியது. இது 1993 இல் வெளிநாட்டில் பெறப்பட்ட தொழில்வாய்ப்பினை விட 2 சதவீதம் அதிகமானதாகும்.

தொழிலாளர் நல்லுறவைப் பொறுத்தவரையில், 1994 இல் அரசு, தனியார்துறை இரண்டிலும் தொழிலாளர் கோரிக்கைகள் தொடர்பான தொழிற் பிணக்குகள் அதிகரித்தமையை அவதானிக்க முடிந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் நாட்டில் 233 வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றன. ஆண்டின் இறுதிக் காலாண்டில் 123 வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்பட்டதுடன் அவற்றில் 100, தொழில் தொழிற் பயிற்சி அமைச்சினதும் தொடர்பான அமைச்சுக்களினதும் தலையீடுகளுடன் தீர்த்து வைக்கப்பட்டன. 1994 இன் இறுதியில் 23 வேலை நிறுத்தங்கள் மட்டும் தீர்க்கப்படாது எஞ்சியிருந்தன.

**அட்டவணை 1.45**

**தொழிற்படையும் தொழில் நிலையும்**

**1990 – 1994 ***

(ப. இ. ஆட்கள்)

| விடயம் | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|---|
| மொத்தத் தொழிற்படை | 6.00 | 5.83 | 5.8 | 6.08 | 6.17 |
| மொத்தத் தொழில் வாய்ப்பு | 5.03 | 4.94 | 4.85 | 5.26 | 5.36 |
| பொருளாதாரத் துறையின்படி | | | | | |
| வேளாண்மை, மீன்பிடி அகழ்வும் கல்லுடைத்தலும் | 2.49 | 2.23 | 2.01 | 2.45 | 2.23 |
| தயாரிப்பும், பயன்பாட்டுப் பொருட்களும் | 0.60 | 0.64 | 0.67 | 0.70 | 0.75 |
| கட்டடவாக்கம் | 0.23 | 0.20 | 0.26 | 0.20 | 0.26 |
| பணிகள் | 1.71 | 1.87 | 1.91 | 1.91 | 2.12 |

* வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த

மூலங்கள் : காலாண்டு தொழிற்படை அளவீடு, குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்